மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

விடை--

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை

133–

அரசு பொறியியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணத்தை உயர்த்துதல்

*10862–திரு. **வி. கே. லட்சுமணண்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் கல்விக் கட்டணத்தை உயர்த்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

விடை--

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண்.738, கல்வி, நாள் 2.8.93-ல் அரசு /அரசு நிதி உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் 1993–94ம் கல்வி ஆண்டிலிருந்து கல்விக் கட்டணத்தை ரூ. 2000/-- ஆக அரசு உயர்த்தியுள்ளது.

138–

புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் கட்டிடம் கட்டுதல்

*15298–திரு. **சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோவிலுக்குச் சொந்தமான காலி மனையிடங்களில் அரசு செலவில் கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்: